# யாழ் மாவட்ட நீதிபதிக்கு கொலை பயமுறுத்தல்!

Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

ஈழமுரசு

முரசு 1 24-1-1985 வியாழக்கிழமை (இரத்தாக்ஷி தை 11) முழக்கம் 183

## வழக்கு விசாரணைகளை ஒத்திவைக்க சட்டத்தரணிகள் சங்கம் கோரிக்கை!

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதிக்கு நேற்று இரண்டாவது தடவையாகவும் பயமுறுத்தல் கடிதம் அனுப்பப்பட்டது முன்னைய எச்சரிக்கையை மீறி வழக்குகள் விசாரிக்கப்படுவதைச் சுட்டிக்காட்டி, கொலைப் பயமுறுத்தலாக இரண்டாம் கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாக நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன. அதேவேளையில், யாழ்ப்பாணம் சட்டத்தரணிகள் சங்கம் அதன் தலைவர் திரு. எஸ் ஆர். சனகநாயகம் தலைமையில் நேற்று அவசரம் அவசரமாகக் கூடி இங்குள்ள நீதிமன்றங்களில் விசாரணைக்குக் காத்திருக்கும் சகல வழக்குகளையும் காலதாமதமின்றி ஒத்திவைக்குமாறு வேண்டுகோள் விடுப்பதெனத் தீர்மானம் எடுத்தது இதன் பின்னர் சங்கச் செயலாளர் திரு. இராஜராஜேஸ்வரன் தங்கராசாவினாலும், சங்கத் தலைவரினாலும் ஒப்பமிடப்பட்டு யாழ்ப்பாணம் உயர் நீதிமன்ற நீதிபதி, மாவட்ட நீதிபதி, மாஜிஸ்டிரேட் நீதிமன்ற நீதிபதி, தொழில்நீதிமன்ற நீதிபதி உட்பட சகல நீதிமன்றங்களின் நீதிபதிகட்கும் அனுப்பப்பட்ட கடிதத்தில், தற்போது யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள —4-ம் பக்கம் பார்க்க

## வெல்லாவெளி: கண்ணிவெடிக்கு 3 பொலிஸ் பலி!

(மட்டுநகர்)

மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த வெல்லாவெளி பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த மூன்றுபொலிஸார் கண்ணிவெடியில் சிக்கி மரணமானர்கள். இவர்கள் பொலிஸ் ஜீப் வண்டியில் பிரயாணம்செய்த போதே கண்ணிவெடி வெடித்ததாம்

பொலிஸ் நிலையத்திலிருந்து சுமார் முன்னூறு யார் தூரத்தில் வீதியில் செல்லும் போது புதைத்து வைக்கப்பட்டிருந்த கண்ணிவெடி வெடித்ததாக அறிவிக்கப்பட்டது.

மரணமானவர்கள் மாசிலாமணி (சார்ஜண் ) தர்மலிங்கம் (கான்ஸ்டபிள்), பி. சுலைமான் (கான்ஸ்டபிள்) என்று அடையாளம் காணப்பட்டது. முதல் இருவரும் கொழும்புத்துறை, சுன்னாகம் பகுதியைச் சேர்ந்தவர்கள்.

வெடிவிபத்தில் சிக்கிய ஜீப் பாரிய சேதத்துக்குள்ளானது மேலும் மூன்று பொலிஸார் படுகாயத்துக்குள்ளானர்கள்

# பலாலிதளத்தில் 'ரொக்கட்' மூலம் விமானத்தைத் தகர்க்க முயற்சி!

## அயல் கிராமங்களில் இராணுவ தேடுதலால் பதற்றம்; உபாலி விமான சேவையும் ரத்து!

பலாலி விமான நிலையத்துக்கருகாமையில் இலங்கை விமானப் படைக்குச் சொந்தமான விமானமொன்றை "ரொக்கட் லோஞ்சர்" மூலம் சுட்டுத் தகர்ப்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சி பற்றி பாதுகாப்புத் தலைமை வட்டாரத்துக்குத் தகவல் கொடுக்கப்பட்டுள்ளது. விமான ஓட்டியின் சாதுரியத்தால் விமானம் தாக்குதலிலிருந்து காப்பாற்றப்பட்டதாகவும் உள்ளிருந்த ராணுவ வீரர்கள் தெய்வாதீனமாகத் தப்பியதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் இச் சம்பவத்தையடுத்து ஆயுதம் தாங்கிய சீருடையினர் பலாலியின் அயல் கிராமங்களில் வாகனங்களிலும், நடந்தும் சென்று பரவலான தேடுதல் வேட்டைகளை நடத்தியதால் அப்பகுதிகளில் பெரும் பதற்றம் நிலவியது குரும்பசிட்டி, புன்னாலைக்கட்டுவன், கட்டுவன் பகுதிகளில் இத்தேடுதல் நடைபெற்றதாகத் தெரியவந்துள்ளது.

குறிப்பிட்ட இயக்கமொன்றைச் சேர்ந்த இளைஞர்கள் விமானம் தாழப் பறந்து வந்து, விமான நிலையத்தில் இறங்குவதற்கு ஆயத்தமான போது நான்கு அல்லது ஐந்து "ரொக்கட் லோஞ்சர்களை" வெடிக்க வைத்து விமானத்தைத் தகர்க்கமுனைந்ததாக தெரிவிக்கப்பட்டது.

விமானப்படைக்குச் சொந்தமான இந்தச் சிறு ரக விமானத்தில் இராணுவத்தினர் இருந்தனராம்.

தாக்குதல் முயற்சித் தகவல் கிடைத்ததும் பலாலி விமானநிலையத்தின் நாலாபக்கத்தையும் சூழ்ந்து கொண்ட இராணுவத்தினர் சுமார் பதினைந்து நிமிடங்களாக துப்பாக்கிகளால் சுட்டனர். —4-ம் பக்கம் பார்க்க

### பி.ரி. ஐ. அலுவலகம் சீல் வைக்கப்படவில்லை

கொழும்பிலுள்ள பி.ரி ஐ. செய்தி நிறுவன அலுவலகம், இலங்கை அரசாங்கத்தினால் சீல் வைக்கப்படவில்லை என்று கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் நேற்று அறிவித்தது. பி.ரி ஐ நிருபராகவிருந்த திரு. தர்மராஜன் வசித்த இல்லமே —4-ம் பக்கம் பார்க்க

### பருத்தித்துறையில் நேற்று

## சூடுபட்டு பலர் மரணம்; சடலங்கள் மர்ம மறைவு!

பருத்தித்துறை பொலிஸ் பகுதியில் சீருடையணிந்த ஒரு குழுவினரால் நேற்றுக்காலை மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் துப்பாக்கிச் சூட்டுச்சம்பவத்தின்போது அடையாளம் காணப்படாத பலர் மரணமானதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தீவிரவாதக் குழுவொன்றைச் சேர்ந்த சிலரே இச்சம்பவத்தின்போது மரணமடைய நேர்ந்ததாகவும், இவர்களது சடலங்கள் சிலமணிநேரத்துள் அங்கிருந்து மர்மமாக மறைந்து விட்டதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

பருத்தித்துறை பாதுகாப்புப் படையினர் மீண்டும் சம்பவம் நடைபெற்ற இடத்துக்குச் சென்றபோதே சடலங்கள் காணாமல் போனதைக் கண்டுபிடித்தனராம்.

### விவசாயி சுட்டுக் கொலை

புளியங்குளம்பகுதியில் தமிழ் விவசாயி ஒருவர் சீருடையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு நேற்று இரையானார். இவரது சடலம் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

★ இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ★ கொல்லப்பட்ட தமிழக மீனவருக்கு இலங்கை நஷ்டஈடு தரவேண்டும்!

## ராஜீவின் நேற்றைய முக்கிய பேச்சு

(புதுடில்லி)

"இலங்கையில் சிறுபான்மை இனத்தவருக்கு உண்டாகியுள்ள ஆபத்து குறித்து இலங்கை அரசுடன் பாரத அரசு தொடர்பு கொண்டுள்ளது. இப் பிரச்சினைக்கு இராணுவ ரீதியிலல்ல, அரசியல் ரீதியில் தான் தீர்வு காணப்படவேண்டுமென்பதனை பாரதம் உறுதியாக நம்புகிறது" என்று பிரதமர் திரு ராஜீவ் காந்தி ராஜ்யசபையில் நேற்றுப் பேசுகையில் சொன்னார் இதேவேளை லோக்சபாவில் காங்கிரஸ் உறுப்பினர் கே. ரி. கோசலராம் கேட்ட கேள்விக்குப் பிரதமர் எழுத்துமூலம் அளித்த பதிலில் "இலங்கை அரசினால் கைது செய்யப்பட்டுள்ள தமிழக மீனவர்கள் பதினேழு பேரையும் உடன் விடுவிக்க வேண்டும் கைப்பற்றப்பட்ட படகும் விடுக்கப்பட வேண்டும் என்று பாரத அரசு இலங்கை அரசிடம் கோரியுள்ளது. உயிர் சேதம் பொருட்சேதமும்கூறப்பட்டுள்ளது.

இலங்கைக்கடற்படையினால் மூன்று தமிழக மீனவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இது குறித்துபாரத அரசு இலங்கை அரசிடம் கடும் ஆட்சே —4-ம் பக்கம் பார்க்க

### சூட்டுக்காயம் இருவருக்கு

கிளிநொச்சியில் சைக்கிளில் வந்த ஜி திருச்செல்வம் (28) என்பவரும், பூனகரியில் ட்ராக்டரில் வந்த எஸ். சபாரட்ணம் (37) என்பவரும் நேற்று சீருடையினரின் துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுடன் யாழ். அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## பூஸாவதந்தி வெறும்பொய்; 25 பேர் வெள்ளி விடுதலை?

பூஸா முகாமிலுள்ள தமிழ் இளைஞர்களுக்கு ஆபத்து விளைக்கப்பட்டதாக நேற்று அடிபட்ட வதந்திகள் முற்றிலும் பொய்யானவை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ் அரசாங்க அதிபர் திரு எம். பஞ்சலிங்கம். பூஸா ராணுவ முகாம் பொறுப்பதிகாரி கேர்ணல் பெர்னாண்டோவுடன் தொடர்புகொண்டு தடுத்துவைத்துள்ள இளைஞர்களை படிப்படியாக விடுதலை செய்வது பற்றி கதைத்தார்.

மேலும் இருபத்தைந்து இளைஞர்களை இவ்வார இறுதியில் விடுதலை செய்வதற்கு — 4-ம் பக்கம் பார்க்க

## சென்னை தகவல் நிலையம் அறிவிப்பு!

## யாழ்தேவி கண்ணிவெடியில் 200 ராணுவ வீரர் மரணம்

(சென்னை)

முறிகண்டிக்கும், மாங்குளத்துக்கும் இடையே நிகழ்ந்த யாழ்தேவி குண்டுவெடிப்புச் சம்பவத்தில் இருநூறுக்கும் குறையாத இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் இந்த ரயிலில் செல்ல விடாது பொது மக்கள் தடுக்கப்பட்டதாகவும் சென்னையில் தமிழ்த் தகவல் மையம் வெளியிட்டுள்ள பத்திரிகைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குண்டுவைத்துத் தகர்க்கப்பட்டபின் யாழ்தேவி ரயில் மீது கைக்குண்டுகள் வீசப்பட்டதுடன் துப்பாக்கிப் பிர —4-ம் பக்கம் பார்க்க

## இந்திய அரசின் உயர் மட்டப்போக்கில் இலங்கை அமைச்சர்கள் பூரணதிருப்தியாம்

இலங்கை பற்றி இந்தியாவின் உயர்மட்டத்தில் நல்லெண்ணமும், நட்புறவும் இருப்பதையிட்டு அமைச்சரவை திருப்தி அடைந்திருப்பதாக ராஜாங்க அமைச்சர் கலாநிதி ஆனந்த திஸ்ஸ டீ அல்விஸ் நேற்றைய அமைச்சரவை கூட்டமுடிவில் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

இலங்கையைப் பற்றி இந்தியப் பாராளுமன்றத்தில் பிரதமர் ராஜீவ் காந்தி தெரிவித்த கருத்துக்களைப் பற்றி நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் ஆராயப்பட்டதாகத் தெரிவித்த அமைச்சர் அல் —4-ம் பக்கம் பார்க்க

# கொழும்பு செல்லும் தமிழ் வாலிபர்கள் படும்பாடு!

(சுண்டுக்குளி)

கொழும்பில் பஸ் வண்டிகளில் பிரயாணம் செய்யும் போதும், வீதிகளில் நடந்து செல்லும் போதும் சோதனைகளுக்கு உள்ளாக்கப்படும் தமிழ் வாலிபர்கள் தம்மிடமுள்ள பணத்தைப் பறி கொடுத்து விட்டு நிர்க்கதியான நிலையை அடைந்து வருகின்றனர்.

வெளிநாடு செல்வதற்கான பாஸ்போர்ட் எடுப்பதற்கும், வேலை வாய்ப்பு நேர்முகப் பரீட்சைகளுக்கும், அவசர காரணங்களுக்காகவும் கொழும்பிற்குச் செல்லும் வடபகுதி வாலிபர்கள் இதனால் நடுத்தெருவில் நிற்க வேண்டிய நிர்ப்பந்தத்தை அனுபவிக்க வேண்டியுள்ளதாகப் புகார் தெரிவிக்கப்படுகிறது.

சந்தேகத்தின் மீது சோதனை, விசாரணைகள் என்ற பெயரில் வடபகுதி வாலிபர்களின் பணம் சூறையாடப்படுவதால் தமது வீடுகளுக்குத் திரும்பிச் செல்வதற்கும் வடபகுதிக்கு வருவதற்குப் பணமின்றி அவதியுறும் பிரஸ்தாப வாலிபர்கள் வீதிகளில் நின்று பணத்திற்காகப் போவோர் வருவோரிடமெல்லாம் பிச்சை கேட்டு வருகின்றனராம்.

## வர்த்தகரிடம் பணம் கொள்ளை

(புத்தூர்)

புத்தூரில் இருந்து சாவகச்சேரி சந்தைக்கு சென்று கொண்டிருந்த இரு வர்த்தகர்களிடம் இருந்து 18,000 ரூபா துப்பாக்கி முனையில் கொள்ளையடிக்கப்பட்டது.

பணத்தைப் பறிகொடுத்த வர்த்தகர்களான செல்லத்துரை, இராமநாதன் ஆகியோர் புத்தூர் மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு அருகில் சென்று கொண்டிருக்கும்போது சைக்கிளில் வந்த இரு இளைஞர்கள் துப்பாக்கி முனையில் இவர்களை மிரட்டிவிட்டு குறிப்பிட்ட பணத்தைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.




✳ ஆசாத் ரோட், நெயினா முகம்மது பாத்திமா உம்மா தம்பதிகளின் மகள் பௌஸியா இன்று தனது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✳ கல்வியங்காடு வேலாயுதர் சிவபாக்கியம் தம்பதிகளின் மகள் சாந்தகுமாரி இன்று தனது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✳ திருநெல்வேலி தனபாலசிங்கம் கமலபூசணி தம்பதிகளின் மகள் கௌசிகா இன்று தனது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

## வண. பஸ்தியன் ஞாபகார்த்த மணிக்கோபுரம்

(மானிப்பாய்)

படுகொலை செய்யப்பட்ட வண. பிதா பஸ்தியன் அடிகளாரின் ஆத்ம இளைப்பாற்றுக்கான கூட்டுத் திருப்பலியொன்று மல்வம் திருக்குடும்ப தேவாலயத்தில் இன மத பேதமின்றி திரண்டிருந்த மக்கள் முன்னிலையில் அருட்திரு கிறிஸ்டோபர் அடிகளாலும் அருட்திரு பற்றிக்தயானந்தம் அடிகளாலும் நிறைவேற்றி வைக்கப்பட்டது. அத்துடன் அடிகளாரின் ஞாபகார்த்த மணிக்கோபுரத்திற்கான அடிக்கல்லும் நாட்டப்பட்டது. மல்வம் பங்கு மக்களால் அடிகளின் திருவுருவம் பொறிக்கப்பட்ட அழகிய நாட்காட்டிகளும் வழங்கப்பட்டன. இறுதியில் அன்னதானம் வழங்கப்பட்டு அடிகளின் உருவச் சிலையொன்றை ஆலய முன்றலில் அமைக்க முடிவுமெடுக்கப்பட்டது.

## திடீர் வேலை நீக்கம்

யாழ். தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்தில் சுமார் பன்னிரண்டு வருட காலம் சேவையாற்றிய எட்டு ஊழியர்கள் வேலையிலிருந்து நிறுத்தப்பட்டுள்ளனர். நிதி நிலைமையினால் ஆட்குறைப்பு நடவடிக்கையென அவர்களுக்குக் காரணங் காட்டப்பட்டுள்ளது. எவ்வித முன்னறிவித்தலுமின்றி தமது நீண்ட கால சேவையையும் பொருட்படுத்தாது சங்கம் நடந்துள்ளதென்றும் இதனால் தாம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் வருத்தம் தெரிவித்தனர். இவர்களுள் இருவர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

சென். ஜோன்ஸ் அதிபர் பேச்சு:

# சிறந்த பெற்றோரும் நல்ல கல்விக்கூடமுமே மாணவரின் நல்வாழ்வுக்கு உறுதுணை

(நல்லூர்)

"பிறக்கும் பொழுது எந்தப் பிள்ளையும் துட்டனாகவோ, கெட்டவனாகவோ, பயங்கரவாதியாகவோ பிறப்பதில்லை அவனது வாழ்வில் கிடைக்கும் ஆதரவின்மையாலும், கெட்ட நண்பர்களின் சிநேகிதத்தாலும் இந்த நிலைமையை அவன் அடைகின்றான். ஒரு பிள்ளைக்கு நல்ல பெற்றோரும், சிறந்த கல்விக் கூடமுமே சிறந்த சொத்துக்களாகும். பெற்றோரும், கல்விக் கூடமும் அவனது நல்வாழ்வுக்கு உறுதுணையாக அமையாது விட்டால் அவன் வாழ்க்கையில் வெறுப்படைந்து துஷ்டத்தனத்தை மேற்கொள்ள முற்படுவான்"

இவ்வாறு யாழ். பரி. யோவான் கல்லூரி அதிபர் திரு சீ. ஈ. ஆனந்தராஜன் கல்லூரியில் புதிதாக அனுமதி பெற்ற பிள்ளைகளும், அவர்களது பெற்றோரும் கலந்து கொண்ட கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

கல்லூரியின் பீற்றோ ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் அதிபர் தொடர்ந்து பேசுகையில் எமது கல்லூரியின் மாணவர்களின் ஆளுமையை வளர்க்கக் கூடிய கல்வி போதிக்கப்படுகிறது. மாணவர்கள் கல்வியில் தனித்துத் தமது கவனத்தைச் செலுத்தினால் அவர்களுக்கு வேறு வகையான பயிற்சிகளும் பழக்கங்களும் இல்லாமல் போய்விடும். மாணவர்களிடம் மறைந்திருக்கும் சகல ஆற்றல்களையும் வளர்க்கக் கூடிய கல்வி போதிக்கப்பட வேண்டியது அவசியமாகிறது. கல்வியில் மாணவர் செலுத்தும் கவனம் போல விளையாட்டிலும் ஏனைய துறைகளிலும் அவர்கள் போதிய திறமை காட்ட வேண்டும். இதன் மூலமே அவன் வாழ்வில் சிறந்த நிலைமையை அடைய முடியும். பாடசாலையில் பிள்ளைகளைச் சேர்த்து விட்டால் போதும் என்ற நிலைமையை மறந்து பெற்றோர் பாடசாலையின் வளர்ச்சியிலும் போதிய ஒத்துழைப்பு நல்க வேண்டும். ஆசிரியர் பெற்றோர் ஆகியோரின் ஒன்றுபட்ட ஒத்துழைப்பின் மூலமே சிறந்த கல்வியை மாணவர்கள் பெற முடியும் என்று குறிப்பிட்டார்.

## பாதை தயார்

(கொடிகாமம்)

கொடிகாமத்திற்கும் மிருசுவிலுக்குமிடையில் குண்டால் தகர்க்கப்பட்ட புகையிரத பாலம் செப்பனிடப்பட்டு புகையிரத சேவைக்கு தயாராகவுள்ளது.

## பல்கலைக் கழக மாணவர் விரிவுரை

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக சகல விரிவுரைகளும் ஆரம்பமாகியுள்ளதால், மாணவர்கள் அனைவரையும் வகுப்புகளுக்கு சமுகமளிக்குமாறு பல்கலைக்கழக துணைவேந்தர் சு. வித்தியானந்தன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



அகில இலங்கைத் தமிழ் மொழித் தினப் போட்டியில் மத்திய பிரிவு பாஓதலில் செல்வி சுஜாதா பத்மசிகாமணி முதலிடம் பெற்றார். யாழ்/இந்து மகளிர் கல்லூரி மாணவியான இவர் யாழ்/இந்து ஆரம்ப பாடசாலையின் பழைய மாணவியாவார். சைவ பரிபாலன சபையினரால் 1983-ம் ஆண்டில் நடத்தப்பட்ட பண்ணிசைப் போட்டியின் கீழ்ப் பிரிவில் இவர் தங்கப் பதக்கம் பெற்றவர்.

# பாதிப்புற்ற மீனவர்களுக்கு நிதி உதவி கிடைக்கவுள்ளது

அரசின் பாதுகாப்பு வலய சட்டங்களினால் பாதிக்கப்பட்டுள்ள ஊர்காவற்றுறை, பெலிஞ்சிமூலை மீனவ குடும்பங்களுக்கு அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் நிதி உதவி வழங்கியுள்ளது.

ஊர்காவற்றுறை பிரஜைகள் குழுவினர் விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்து இந்தக் கிராமத்திலுள்ள ஒவ்வொருவருக்கும் தலா முப்பது ரூபா வீதம் உதவி வழங்கப்படுகின்றது.

ஊர்காவற்றுறையிலுள்ள தம்பாட்டி, எழுவைதீவு, பருத்தியடைப்பு பகுதிகளிலுள்ள மீனவ குடும்பங்களுக்கும் உதவி பெற்றுத்தருவதில் ஊர்காவற்றுறை பிரஜைகள் குழுவினர் தற்போது ஈடுபட்டு வருகின்றனர்.

## ஓய்வு பெற்ற அதிபர்

(நல்லூர்)

நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றிய திரு ப. கணபதிப்பிள்ளை சேவையிலிருந்து இளைப்பாறியுள்ளார்.

இவர் சிறந்த சமயத்தொண்டராகவும், சமூக சேவையாளராகவும் விளங்கியதுடன் அருணோதய சன சமூக நிலையத்தின் தலைவராகப் பலவருடங்கள் பணிபுரிந்து சிறந்த சேவையாற்றியுள்ளார்.

## மாணவர்கள் இரத்த தானம்

(இருபாலை)

யாழ். மத்திய கல்லூரி உயர் வகுப்பு மாணவர்களும் பத்தாந்தர மாணவர்களும் யாழ் வைத்தியசாலை இரத்த வங்கிக்கு இரத்ததானம் செய்தனர். சுமார் 25 மாணவர்கள் இவ் இரத்ததான கொடுப்பனவில் பங்குகொண்டனர்.

அவசர நோயாளிகளின் நெருக்கடி நிலையை உணர்ந்தும், இன்றைய நாட்டின் நிலைமையை உணர்ந்தும் தாம் இரத்ததானம் வழங்குவதாக கூறினார்கள். எல்லா விதமான குரூப் இரத்தங்களும் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

# வீதிகளில் குப்பை கூளங்கள் துர்நாற்றம் வீசுகிறது!

(குருநகர்)

பொதுமக்கள் நெருக்கடியாக வாழ்கின்ற குருநகர் பகுதியில் வீதிகளையே கழிவுப் பொருட்களை வீசுவதற்கும் பெரும்பாலானவர்கள் பாவிக்க வேண்டி இருப்பதனால் வீதிகள் குப்பை கூளங்களால் நிரம்பி துர்நாற்றம் வீசத் தொடங்கி அப்பகுதி மக்களின் சுகாதாரத்திற்கு அச்சுறுத்தலாக விளங்குகின்றன.

நாளாந்தம் ஒரு பொழுதாகிலும் வீதிகளில் நிரம்புகின்ற கழிவுப் பொருட்களை அகற்றுவதற்கான வாகனங்கள் சேவை புரிய வேண்டிய பகுதியாக விளங்கிய போதிலும் வாரத்தில் ஒரு தடவையே அந்தச் சேவை நிறைவேற்றப் படுகின்ற துர்ப்பாக்கியம் நிகழ்ந்து வருகின்றது.

இதனால் வீதியால் செல்கின்ற வாகனங்களும், பாதசாரிகளும் பெரும் இன்னல்களுக்கு உள்ளாகி வருவது குறிப்பிடத்தக்கது.

## வரி விளம்பரம்

### ஸ்ரீ சக்கரம்

சகலவித தோஷங்களுக்கும், சௌபாக்கியங்களுக்கும் சாஸ்திர முறையில் செய்த ஸ்ரீ சக்கரம் பெற்றுக்கொள்ளலாம்.

ஏல விற்பனை நிலையம்
கோப்பாய்.

### ஏல விற்பனை

எப்பொருளானாலும் வாங்கவும் விற்கவும் தினமும் வாருங்கள் ஏலவிற்பனை நிலையம் சந்தியடி, கோப்பாய்.

### தேவை

எம்மிடமுள்ள பலவித பொருட்களையும் வீடுகளிலும் கடைகளிலும், காரியாலயங்களிலும் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பதற்கு ஆண்களும் பெண்களும் நற்சாட்சிப் பத்திரங்களுடனும், கிராம சேவையாளரின் பத்திரத்துடனும் நேரில் வரவும்.

ஏல விற்பனை நிலையம்,
கோப்பாய்.

### தவறிவிட்டது

சின்னையா குணராஜ் 64 196 2155V இலக்க அடையாள அட்டை நல்லூர் உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்துக்கும் அரசடி வீதி, நல்லூர், ஸ்ரான்லி கல்லூரி சந்திக்குமிடையில் தவறி விட்டது. கண்டெடுத்தோர் ஈழமுரசு காரியாலயத்தில் ஒப்படைக்கவும் அல்லது தொடர்பு கொள்ளவும் சின்னையா குணராஜ் 409 நாவலர் வீதி யாழ்ப்பாணம்.

### விற்பனைக்கு

பருத்தித்துறை, தும்பளையில் சிவப்பிரகாச வித்தியாசாலைக்கு அருகாமையில் 1½ பரப்பு காணி இரண்டறை வீட்டுடன் விற்பனைக்கு உண்டு விளம். இல: 1505 ஈழமுரசு 37, கண்டி வீதி யாழ்ப்பாணம்

மாதாந்தம் 36%. வட்டி விழாக்கால சலுகை!

15-12-84 முதல்
30-01-85 வரை

36% அதிக வட்டி வழங்கும் நிதி நிறுவனம்
தமிழர் நிதியம்
140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். ☎ 22437

உறுதியான பாதுகாப்பிற்கும், மேலதிக லாபத்திற்கும் எம்மிடம் வைப்பிலிடுங்கள்.

உதய சிந்தனை

சுதந்திரத்தின் சாவி மாணவர்களின் கையில் தான் இருக்கிறது
- மகாத்மா காந்தி

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23336

## இதய ஒலி

24-1-85 வியாழக்கிழமை (இரத்தாக்ஷி தை 11)

# இன்றைய தேவைகளில் இதுவும் பிரதானம்

வடக்கே அமுல் செய்யப்பட்டு வரும் பல்வேறு அவசரகாலச் சட்டங்களால் குடாநாடு ''வரண்ட பிரதேச''மாக மாறிக் கொண்டு வருவதை அனைவரும் நன்குணர்வர்.

தொழிலின்மை, போக்குவரத்துச் சீர்கேடு, பாதுகாப்பின்மை, பொருளாதார தாக்கம் என்பனவற்றால் இந்த 'வரட்சி' ஏற்பட ஆரம்பித்துள்ளது.

இந்த நிலையில், ஆயுதப்படையினரின் 'தர்பார்' அப்பாவிப் பொதுமக்களை மேலும் மேலும் இன்னலுக்குள்ளாக்கி வருவதை அன்றாடம் பத்திரிகை படிப்பவர்கள் தெரிந்து கொள்ள முடியும்.

தினசரி எங்காவது ஓரிடத்தில் நடைபெறும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தினால், யாராவது ஒருவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்படுவது வழக்கமாகி வருகிறது.

மருந்துத் தட்டுப்பாடு, உணவுத் தட்டுப்பாடு, பிராணவாயுத் தட்டுப்பாடு போன்றவற்றால் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கும் யாழ் ஆஸ்பத்திரியில் அவசர நோயாளிகள் அனுமதி மட்டும் தாராளமாக நடைபெறுகின்றது.

சிருடையினரின் கைங்கரியத்தால் உயிருடன் போராடிக் கொண்டு ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரப்படும் ஒருவருக்கு, முதலில் தேவைப்படுவது இரத்தம்.

ஆனால், யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி இரத்த வங்கி தற்போது ''வரட்சி'' காண ஆரம்பித்துள்ளதாக வெளி வந்திருக்கும் செய்தி, எத்தனை உயிர்களை ஊசலாட வைக்குமோ என்ற அச்சத்தையே ஏற்படுத்துகின்றது.

சூட்டுக் காயங்களுடன், இரத்தம் வழிந்தோட ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்படும் ஒருவருக்கு எத்தனை மருந்துகள் வழங்கியும் பிரயோசனமில்லை.

ஆபத்துக்குத் தேவை இரத்தமேதான்.

ஆயுதங்களை அள்ளி வழங்கும் அரச அதிகாரிகள், அதன் பயனாக ஏற்படும் ஆபத்தைத் தவிர்க்க ஒரு துளி இரத்தத்தைத் தானும் ஆஸ்பத்திரிக்கு வழங்குவதில்லை.

வடக்கே கடமையாற்றும் பாதுகாப்புப் படையினருக்காக தெற்கேயுள்ள மக்கள் தினம்தினம் இரத்ததான நிகழ்ச்சிகளை நடத்துகின்றார்கள்.

ஆனால், பாதிக்கப்படும் அப்பாவி மக்களுக்கு வழங்குவதற்கு இரத்தமே இல்லாத ஒரு நிலை, யாழ். ஆஸ்பத்திரி இரத்த வங்கிக்கு இப்போது ஏற்பட்டு வருகின்றது.

வடக்கில் ஏற்பட்டுவரும் வரண்ட பொருளாதாரமும், யாழ் ஆஸ்பத்திரியில் இரத்தத்துக்கு ஏற்பட்டுவரும் வரட்சி நிலையும் மிகவும் ஆபத்தான அறிகுறிகளாகவே எமக்குத் தெரிகின்றன.

இந்தச் சூழ்நிலையில் காலத்தின் தேவையை அறிந்து தாராள சிந்தையாளரை இரத்த தானம் செய்ய முன்வருமாறு யாழ். ஆஸ்பத்திரி சுப்பிரின்டன் டாக்டர் நச்சினார்க்கினியர் விடுத்திருக்கும் வேண்டுகோளை யாரும் உதாசீனம் செய்து விடக்கூடாது.

''சிறுதுளி பெரு வெள்ளம்'' என்பர். யாழ். ஆஸ்பத்திரி இரத்த வங்கிக்குத் தேவைப்படுவதும் இதுவேதான்.

''தானங்களில் சிறந்தது இரத்த தானம்'' என்பர் கற்றறிந்த மூத்தோர். ஒருவர் வழங்கும் ஒரு துளி இரத்தம், இன்னொரு உயிரைக் காப்பாற்றலாமல்லவா?

இதனை நன்குணர்ந்த யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் சிரேஷ்ட மாணவர்கள் தாமாகவே முன்வந்து, இரத்தம் வழங்கியிருப்பதான செய்தி மற்றவர்களுக்கு ஒரு முன்மாதிரியாக அமையவேண்டும்.

இரத்த தானத்தின் சிறப்பை விளக்கிப் பிரசுரங்கள் வெளியிடுவதாலும் போஸ்டர்கள் ஒட்டுவதாலும் பிரயோசனமில்லை.

மத்திய கல்லூரி மாணவர்களின முன் மாதிரியைப் பின்பற்றி, எமது மாணவ பரம்பரை இதனை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

பல்கலைக் கழக, தொழில் நுட்பக் கல்லூரிகளில் கல்வி பயிலும் மாணவர்கள் இரத்ததான வைபவங்களை ஆங்காங்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

வடக்கே இயங்கும் தொண்டர் ஸ்தாபனங்கள் இரத்ததான நிகழ்ச்சிகளை கிராமங்கள் தோறும் ஒழுங்கு செய்ய வேண்டும்.

இன்றைய யாழ்ப்பாணத்தின் அத்தியாவசிய தேவைகளில் இது மிக மிக முக்கியமான ஒன்றாகும். இல்லாவிட்டால் எத்தனையோ உயிர்கள் அநியாயமாக மரணத்தைத் தழுவக் கூடும்.

---

### பங்களாதேஷ் அதிபர் உறுதியான அறிவிப்பு

# “குறித்த காலத்தில் தேர்தல் தாமத முயற்சியை சகியேன்”

(டாக்கா)

''பங்களாதேஷில் பொதுத்தேர்தல் ஏப்ரல் மாதத்தில் திட்டமிட்டபடி நடந்தே திரும். அதில் எந்த மாற்றமும் இல்லை. ஜனநாயகத்தைப் பாதுகாக்கப் பொதுத் தேர்தல் ஒன்றே வழி என்பதனை அரசு உணர்ந்துள்ளதாலேயே இந்நடவடிக்கை எடுக்கப்படுகிறது எதிர்க்கட்சிகள் பொதுத் தேர்தலை நடத்த ஒத்துழைக்கவேண்டும். பொதுத் தேர்தலைத் தாமதப்படுத்த எடுக்கப்படும் முயற்சிகளை அரசு சகித்துக்கொள்ள மாட்டாது'' என்று பங்களாதேஷ் இராணுவ ஜனாதிபதி லெப்டினண்ட் ஜெனரல் எர்ஷாத் நேற்று டாக்காவில் நடைபெற்ற மக்கள் பேரணியில் பேசுகையில் கூறினார்.

''பொதுத்தேர்தல் நீதியாகவும், நியாயமாகவும் நடைபெறும் என ஏற்கனவே உறுதியளிக்கப்பட்டுள்ளது. எனவே எதிர்க்கட்சிகள் புறக்கணிக்க வேண்டிய அவசியமே இல்லை'' என்றும் ஜனாதிபதி தனது உரையில் சொன்னார்.

இது இவ்வாறு இருக்க பொதுத் தேர்தலைப் பகிஷ்கரிப்பதென்ற தம் நிலையில்பங்களாதேஷ் எதிர்க்கட்சிகள் உறுதியாக உள்ளன. தேர்தல் அறிவிப்புக் குறித்து அவை அதிருப்தி தெரிவித்துள்ளன

பொதுத் தேர்தல் நடத்தப்படுமுன் இடைக்கால பராமரிப்பு அரசு ஒன்று நிறுவப்படவேண்டும் என்பதே எதிர்க்கட்சிகளின் நிலைப்பாடாகும்.

## இஸ்ரேல் நடவடிக்கை

(டெல் அவிவ்)

தென்லெபனானில் இருந்து தனது துருப்புகளை வாபஸ் பெறுவதற்கு முன்னோடியாக இஸ்ரேல் அங்கிருந்து தனது தளபாடங்களை வெளியேற்றி வருகிறது.

தனது துருப்புகளை இஸ்ரேல் மூன்று கட்டங்களாக வாபஸ் பெறவுள்ளது.

## பாகிஸ்தான் மறுக்கிறது

(லாகூர்)

கடந்த ஆறுமாதகாலத்தில் காஷ்மீர் பகுதியில் 25 இந்திய இராணுவவீரர் பாகிஸ்தான் துருப்புகளால் கொல்லப்பட்டனர் பலர் காயமடைந்தனர் என்ற குற்றச்சாட்டைப் பாகிஸ்தான் மறுத்துள்ளது.

## வார்ஸோவில் பேச்சுவார்த்தை

(வார்ஸோ)

போலந்தும், பாரதமும் தொழில் நுட்பம் உட்பட பல துறைப்பட்ட துறைகளிலும் ஒத்துழைப்பினை மேற்கொள்ளவுள்ளன. ஒருவருடத்திற்கு முன் புதுடில்லியில் எடுக்கப்பட்ட தீர்மானமும் வார்ஸோவில் நிகழும் பேச்சுவார்த்தைகளின்போது பரிசீலிக்கப்படவுள்ளதாக நேற்று தெரிவிக்கப்பட்டது.

### மாஜி பாரத ஜனாதிபதி கருத்து

# தேசிய பிரச்சினைத் தீர்வுக்கு எதிரணி உதவ வேண்டும்

(ஹைதராபாத்)

''தேசியரீதியிலானப் பிரச்சினைகளைத்தீர்த்துவைப்பதற்கு மத்திய அரசு சார்பில் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி எடுக்கும் முன்முயற்சிகளுக்கு எதிர்க்கட்சிகள் ஆதரவளிக்க வேண்டுமே தவிர எதிர்ப்புக் காட்டக்கூடாது.'' என்றுமுன்னாள் பாரத ஜனாதிபதி திரு. சஞ்சீவ ரெட்டி நேற்று ஹைதராபாத்தில் கருத்து வெளியிட்டார்.

''தேசியரீதியில் ஊறுவிளைவிக்க முனையும் எவரும் தண்டனைக்குரியவரே'' என்றும் அவர் கூறினார்.

## 'திரு'வுக்கு எம். ஜி. ஆர். தந்தி

(சென்னை)

நியுயோர்க் புறூக்லின் மருத்துவமனை சென்று முதலமைச்சர் எம் ஜி இராமச்சந்திரனை நேரில் சந்தித்து தனது உள்ளக் குமுறலை வெளிப்படுத்துவது என்ற தனது முடிவை மாஜி தமிழக சத்துணவுத் திட்ட அமைச்சர் திரு. எஸ். திருநாவுக்கரசு கைவிட்டுள்ளார்.

புதுடில்லியில் இருந்து நேற்றுத் தமிழகம் திரும்பிய அவர் சென்னைக்குத் தான் பெப்ரவரி மாதம் நான்காம் திகதி வந்துவிடுவதாகவும் அதுவரை காத்திருக்குமாறும் முதலமைச்சர் தனக்குத் தந்தி மூலம் அறிவித்துள்ளார் என்று நிருபர்களிடம் தெரிவித்தார்.

தனது இலாகாப் பொறுப்புகள் சில மீளப்பெறப்பட்டதனையடுத்து நிதியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியனுடன் உண்டான கருத்து மோதலால் அவர் பதவி துறந்திருந்தார். முதலமைச்சரின் விருப்பப்படியே இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக திரு. நெடுஞ்செழியன் கூறியிருக்கிறார்.

## சந்திரபோஸ் நினைவாக...

(புதுடில்லி)

பாரதஅன்னையின் அடிமைத்தளையை தகர்த்தெறிந்து வேங்கைநிகர் வீரத்திற்குப் புதிய இலக்கணம் படைத்திட்ட சுபாஸ் சந்திரபோஸின் 88வது நினைவு தினம் நேற்றுப் பாரதமெங்கும் விரிவான ரீதியில் கொண்டாடப்பட்டது. அவரது சிலைக்கு மாலையணிதல், மற்றும் கட்டுரை, ஓவியப் போட்டிகள்என்பனவும் இடம் பெற்றன.

## தீர்மானம் நிறைவேறியது

(புதுடில்லி)

லோக சபையில் ஜனாதிபதி உரைமீது நன்றி தெரிவிக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. எதிர்க் கட்சியினரால் கொண்டுவரப்பட்ட திருத்தங்கள் குரல் வாக்கெடுப்பு மூலம் நிராகரிக்கப்பட்டன.

## பாரதத்திற்கு தகவலில்லை

(புதுடில்லி)

''இலங்கை இனப்பிரச்சினை சுமுகமாகத் தீர்க்கப்பட தன் ஒத்துழைப்பினை வழங்க காமன்வெல்த் பொதுச் செயலாளர் திரு. ரம்பால் முன் வந்திருப்பதாக பாரதத்திற்கு இது வரை தகவல் ஏதும் கிடைக்கவில்லை'' என்று பாரத வெளிவிவகார இணை அமைச்சர் குர்ஷித் ஆலம்கான் தெரிவித்துள்ளார்.

## தெஹ்ரானில் சந்திப்பு

(தெஹ்ரான்)

பாரதத்துடனான வர்த்தகத் தொடர்புகளை ஈரான் விரிவாக்கிக் கொள்ளவிருக்கிறது. இதன் பொருட்டு இருதரப்பினரும் தெஹ்ரானில் சந்திப்பு ஒன்றினை நிகழ்த்தியுள்ளனர்.

## கர்னாடக சட்ட சபை தேர்தல்

(பெங்களூர்)

கர்னாடக மாநிலத்தில் மார்ச் மாதம் ஐந்தாம் திகதி சட்ட சபைத் தேர்தல் நடைபெறும் என்ற அறிவிப்பை முன்னாள் ஜனதா ஆட்சி வரவேற்றுள்ளது. நட்புக் கட்சிகளுடன் உடன்பாடு உருவாகும் பூர்வாங்கப் பேச்சுவார்த்தைகள் நடைபெறும் என்று ஜனதாக் கட்சி முக்கிய பிரமுகர் ஒருவர் நேற்றுத் தெரிவித்தார்.

### புதுடில்லியில் ஆர்ஜன்டீன அதிபர்

# பொருளாதார விஞ்ஞான கலாசார உறவு வலுவுறும்

(புதுடில்லி)

ஆர்ஜன்டீனாவின் ஜனாதிபதி டாக்டர் அல்பான்ஸ் தனது பாரத விஜயத்தின்போது பாரதத்துடனான பொருளாதார, விஞ்ஞான, கலாசார உறவுகளை வலுப்படுத்துவது குறித்து உடன்படிக்கைகள் சிலவற்றிலும் கைச்சாத்திடவுள்ளார்.

ஒருவாரம் பாரதத்தில் தங்கியிருக்கும் அவர் 26ம் திகதி நிகழும் பாரதக் குடியரசு தினக் கொண்டாட்டத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார் எனவும் புதுடில்லி வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆர்ஜன்டீன ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டபின் அவர் மேற்கொண்டுள்ள முதலாவது ஆசிய விஜயம் இதுவேயாகும். புதன் கிழமை அவர் பாரதம் வந்து சேர்ந்தார். ஆர்ஜன்டீனாவுடனான வாணிபம் 1982ம் ஆண்டிலும் பார்க்க 1984ல் பெருகியது எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

28ம் திகதி புதுடில்லியில் அணு ஆயுதப் பரிகரணம் தொடர்பாக நடைபெறும் ஆறு நாடுகளின் உச்சி மாநாட்டிலும் அவர் கலந்து கொள்ளவிருக்கிறார்.

சாந்தி - (யாழ்நகர்)
12-1-85 முதல்
10 30, 2.15 மட்டும்
கமல், சுலக்ஷணா. ராதா,
தங்கவேலு நடித்த
A V. இன்
தூங்காதே தம்பி தூங்காதே
(ஈஸ்மன் கலர்)

ஈழமுரசு

## அச்சுவேலியில் மூன்று குண்டுகள்; இராணுவம் நேற்று மீட்டது!

(அச்சுவேலி)

அச்சுவேலி தபால் நிலையத்துக்கு முன்பாக நேற்று குண்டுகள் வைக்கப்பட்டிருப்பதாக கிடைத்த தகவல்களைத் தொடர்ந்து அப்பகுதியில் ஒரே பதற்றம் நிலவியது. சென்ற ஆகஸ்ட் மாதமும் இதே இடத்தில் குண்டுகள் வைக்கப்பட்டிருந்தது தெரிந்ததே. இதனால் பாடசாலைகள், வர்த்தக நிலையங்கள் நடைபெறவில்லை. பகல் இரண்டு மணியளவில் பாதுகாப்புப் படையினர் அவ்விடத்துக்கு வந்து குண்டுகளை எடுத்ததாகத் தெரியவருகிறது. மூன்று இடங்களில் குழிகள் காணப்பட்டன. இதன்பின் இவர்கள் பஸ் நிலையத்திற்குச் சென்று அவ்விடத்தில் நின்ற சைக்கிள்கள் மீது தமது வாகனத்தைச் செலுத்திச் சென்றனராம். இதனால் அச்சுவேலி ஊடாகச் செல்லும் பருத்தித்துறை பஸ் சேவையும் நடைபெறவில்லை.

### மதுரை மாணவர் கோரிக்கை:

# ஈழம் இயக்கங்கள் ஒன்றுபடவேண்டும் தமிழக மீனவருக்கு ஆயுதம்வழங்குக!

(மதுரை)

"இலங்கையில் தமிழீழ விடுதலை இயக்கங்கள் யாவும் ஒன்றுபடவேண்டும்" என்று மதுரையில் நடைபெற்ற அனைத்துக் கல்லூரி மாணவர்களின் ஊர்வலத்தில் பிரதான கோஷம் எழுப்பப்பட்டது

செவ்வாய்க்கிழமை மாலை மூவாயிரம் மாணவர்கள் கலந்து கொண்ட இவ்வூர்வலத்தினர் மதுரை ஆட்சித் தலைவரிடம் மனு ஒன்றினையும் கையளித்தனர்.

"பார்வைகடலாதிக்க எல்லைக்குள் தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்படுவது உடனடியாக நிறுத்தப்படவேண்டும். தமிழக மீனவர்களுக்குத் தம்மைப் பாதுகாத்துக் கொள்ள ஆயுதங்கள் வழங்கப்படவேண்டும்" என்றும் இம்மாணவர்கள்கோரிக்கைவிடுத்துள்ளனர்.

இலங்கையில் தமிழர்கள் படும் தொடர் இன்னல் குறித்து மாணவர் ஊர்வலம் பலத்த கண்டனம் தெரிவித்தது

இங்குள்ள பல்வேறு உயர் பாடசாலைகளின் மாணவர்களும் ஊர்வலமாக அணிவகுத்துச் சென்றனர். இலங்கையின் இனக்கொலைகளைச் சித்தரிக்கும் பல சுலோகங்களை இவர்கள் தாங்கிச் சென்றனர்.

## கிளிநொச்சி படுகொலைகள் இராணுவ மேஜரிடம் புகார்

(கிளிநொச்சி)

கிளிநொச்சிப் பகுதியில் திங்கட்கிழமை நடைபெற்ற இராணுவத்தினரின் துப்பாக்கிப்பிரயோகங்கள் குறித்து செவ்வாய்க்கிழமை காலைதான் தனக்குத் தெரியவந்ததாக கிளிநொச்சி மாவட்ட இராணுவ இணைப்பதிகாரி மேஜர் குலதுங்க கிளிநொச்சிப் பிரஜைகள் குழுவினர் அவருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு முறையிட்டபோது தெரிவித்தாராம்,

"குறிப்பிட்ட இராணுவத்தினர் ஆனையிறவு முகாமைச் சேர்ந்தவர்களல்ல. வேறுபகுதியைச் சேர்ந்தவர்களாக இருக்கவேண்டும். எனினும் நடந்த சம்பவம் குறித்து நடவடிக்கை எடுப்பேன்" என்றும் இத்தகைய சம்பவங்கள் இனிமேலும் நிகழாதிருக்க ஆவனசெய்வதாகவும் அவர் உறுதியளித்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

## சிறில் மத்தியு திட்ட டாக்ஸிகள் சுவீகரிப்பு

அமைச்சர் பதவியிலிருந்து நீக்கப்பட்ட சிறில் மத்தியுவினால், ஐக்கிய தேசியக் கட்சியின் அங்கத்தவர்களுக்கென அறிமுகப்படுத்தப்பட்ட "மூன்று சில்லு டாக்ஸி"களை அரசாங்கம் நேற்றுமுதல் "அரசாங்க உடைமையாக்கப்பட்ட வர்த்தகச் சட்டத்தின்" கீழ் சுவீகரித்தது.

சுமார் இருநூறுக்கும் அதிகமான 'மூன்று சில்லு டாக்ஸி'கள், சுய உதவி வேலைத் திட்டத்தின் கீழ் ஐக்கிய தேசியக் கட்சி அங்கத்தவர்களுக்குத் தலைநகரில் வழங்கப்பட்டிருந்தன.

## குண்டுகள் கண்டுபிடிப்பு

(பலாலி)

பலாலி இராணுவ முகாமுக்கு ஒன்றரை மைல் தொலைவில் வயாவிளான் மத்தியமகா வித்தியாலயத்திற்கும், வடக்கு புன்னாலைக் கட்டுவன் சந்திக்கும் இடையே யாழ்—பலாலி பிரதான வீதியில் தீவிரவாத இளைஞர்களால் வைக்கப்பட்டிருந்த கண்ணிவெடிகள் செவ்வாய்க்கிழமை முற்பகல் அகற்றப்பட்டவேளை அப்பகுதி முழுவதுமே சீருடையினர்மயமாகக் காட்சியளித்தது.

பிரதான வீதியில் சங்கிலித் தொடர்போல் வந்த ஏராளமான இராணுவ வாகனங்களில் மட்டுமன்றி அப்பகுதித் தோட்டங்கள், பாதைகள், பற்றைகள், பனை வடலிகள் முதலானவற்றுக்கு ஊடாகக்கூட சீருடையினர் நிறைந்து காணப்பட்டனர்.

### தமிழகம் திரும்பிய பின்

## பரங்கிமலையில் எம்.ஜி. ஆரை சகலரும் பார்க்க முடியும்

(சென்னை)

"முதலமைச்சர் திரு எம். ஜி. இராமச்சந்திரன் பெப்ரவரி மாதம் 2ம் திகதி நியுயோர்க்கிலிருந்து புறப்பட்டு 4ம் திகதி சென்னை வந்தடைவார் பம்பாய் வரை சாதாரண விமானத்தில் வரும் அவர், அங்கிருந்து தனி விமானத்தில் சென்னை வருவார் என்று நிதியமைச்சர் திரு இரா. நெடுஞ்செழியன் நேற்று சென்னையில் நிருபர்களிடம் தெரிவித்தார்.

"முதல்வரை ஒரே இடத்தில் சகலரும் பார்க்கக் கூடியதாக பரங்கிமலைத் தொகுதியில் திடல் ஒன்று அமைக்கப்படுகிறது. யாரும் அவருக்கு மாலையோ, துண்டோ போட்டுத் தொல்லைபடுத்தக் கூடாது. வீட்டில் ஓரிருநாட்கள் ஓய்வெடுத்தபின் ஆளுநரை அவர் சந்திப்பார். புதிய அமைச்சரவை அமைப்பது குறித்து விவாதித்தபின் நிர்ணயிக்கப்படும் திகதியில் அமைச்சரவை பதவியேற்கும்" என்றும் திரு. நெடுஞ்செழியன் தெரிவித்தார்.

### பதிவாளர் பதவிகள்

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அச்சுவேலி, செம்பியன்பற்று, மல்லாகம், மலிலிட்டி ஆகிய நான்கு இடங்களுக்கும் திருமண, இறப்பு, பிறப்பு பதிவாளர்கள் பதவிக்கு நாளை 25ம் திகதிவரை யாழ்ப்பாண மாவட்ட பதிவாளரினால் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்

### தபாலக கொள்ளை

தெல்லிப்பளை, சுன்னாகம் தபால் நிலையங்களில் நேற்று நடைபெற்ற இரண்டு கொள்ளைச் சம்பவங்கள் பற்றி அறிவிக்கப்பட்டுள்ளது. தெல்லிப்பளையில் தொலைபேசி "சுவிச் பெட்டி" கொள்ளையடித்துச் செல்லப்பட்டது. இரண்டு தபாலகங்களிலும் கொள்ளை போன பணம், முத்திரை ஆகியவற்றின் பெறுமதி பற்றி தெரிவிக்கப்படவில்லை.

### ராஜீவின் நேற்றைய...

—1-ம் பக்கத் தொடர்

பம் தெரிவித்துள்ளது. இதற்காக நஷ்டஈடும் கேட்டுள்ளது

அடிக்கடி இலங்கைக் கடற்படையினர் எமது கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைவது குறித்து பாரதம்கவலையடைந்துள்ளது" என்று கூறியிருக்கிறார்.

"கரையோர ரோந்துப் படகுகளின் கண்காணிப்பு தீவிரமாக்கப்பட்டுள்ளது. விழிப்புடனிருக்குமாறு பாரதக் கடற்படையும் கேட்கப்பட்டுள்ளது." என்றும் பிரதமர் தெரிவித்துள்ளதுடன் "பாரதத்தால் அத்துமீறல் குற்றச்சாட்டின்பேரில் இலங்கையின் ஏழு கடற்படையாளுமிகள் பிடிக்கப்பட்டுள்ளனர் என்ற தகவலையும் குறிப்பிட்டார்.

### பி. ரி. ஐ...

—1-ம் பக்கத் தொடர்

வீட்டுச் சொந்தக்காரர்களின் முறையீட்டினால சீல்' வைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

### யாழ்தேவி கண்ணி...

1-ம பக்கத் தொடர்ச்சி

யோகம் மேற்கொள்ளப்பட்டதாகவும் இக்குறிப்பு மேலும் தெரிவித்தது.

இரண்டுமணித்தியாலங்கள் இந்நி நீடித்ததாகவும் உமையாளபுரத்தில ஆதே சமகால வேளை மேலும நாற்பது இராணுவச் சிப்பாய்கள் கொல்லப்பட்டதாகவும் மூன்று இராணுவ முகாம்களில வைக்கப்பட்டுள்ள 150 தமிழ்ப் பெண்கள் கொடுமைபபடுத்தப்பட்டதுடகே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும மேற்படி பத்திரிகைக் குறிப்பு மேலும் கூறியுள்ளது

### இந்திய அரசின்...

— 1-ம் பக்கத் தொடர்

விஸ், இந்தியாவில் தீவிரவாதிகளின் முகாம்கள் இயங்குவதையிட்டு இந்தியப் பிரதமருக்கு அங்குள்ள அதிகார வட்டாரங்கள் தெரிவிக்குமென்று தாம் நம்புவதாகவும் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில, இந்தியாவில் பிரசார வேலைகளில ஈடுபட்டுள்ளவர்களையும இந்திய அரசாங்கத்தையும் இணைத்து குழப்பக் கூடாதெனவும இந்தியாவில் கைப்பற்றப்பட்டுள்ள கடற்படை ரோந்துப் படகு விவகாரம் சம்பந்தமாகவும், இலங்கையில் உள்ள இந்திய மீனவர் பற்றியும திருப்திகரமான தீர்வு காணப்படும எனத் தாம் நம்புவதாகவும கூறினர்.

### பலாலி தளத்தில்...

— 1-ம் பக்கத் தொடர்

ஆனால் எவரும் காயமடைந்ததாகத் தெரியவில்லை.

இச்சம்பவங்களையடுத்து நேற்று நடைபெறவிருந்த உபாலி விமான சேவையின் இரண்டாவது கொழும்பு— யாழ்ப்பாணம் சேவை ரத்துச் செய்யப்பட்டது. உத்தியோகபூர்வ அலுவல்கள் காரணமாக கொழும்பு செல்வதற்கு விமானநிலையம் சென்றிருந்த யாழ் மாநகர ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம் உட்பட மற்றும் நால்வர் கொழும்பு செல்ல முடியாது திரும்பினர்.

### தாராள உதவி

(ஊரெழு)

அண்மையில் முல்லைத்தீவு பகுதிகளில் ஏற்பட்ட அசம்பாவிதங்களின்போது அகதிகளான பொது மக்களுக்கு வழங்குவதற்காக உடைகளையும் நிதியையும் சேகரிக்கும் பணியில் ஊரெழு கலைவாணி சனசமூக நிலையத்தினர் ஈடுபட்டனர். பொதுமக்கள் பலர் இதற்கு ஆதரவளித்து நிதியுதவி வழங்கியதுடன் பெருந்தொகையான உடைகளையும் வழங்கினர்.

## மரண அறிவித்தல்

### செல்வி கௌஷல்யா தங்கராசா

செல்வி கௌஷல்யா தங்கராசா காலமாகிவிட்டார். இவர் கிங்ஸ்லி - சாந்தி தம்பதிகளின் அருமைப் புதல்வியும், கமல்ராஜ் அனுசியாவுடைய அருமைச் சகோதரியும், கொழும்பு மட்டக்குளியைச் சேர்ந்த காலம் சென்ற J. M தங்கராசா தம்பதிகளினதும் மன்னாரைச் சேர்ந்த ஜே. எஸ். பொன்ராசா தம்பதிகளினதும் அன்புப் பேத்தியுமாவார். அன்னாரின் பூதவுடல் இல. 11. குருசோ லேன், யாழ்ப்பாணத்திலிருந்து நல்லடக்கத்துக்காக அர்ச் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு 24 - 1 - 85 வியாழக்கிழமை காலை 9 மணிக்கு எடுத்துச் செல்லப்படும்.

### பூஸா வதந்தி...

—1-ம் பக்கத் தொடர்

நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

அனுராதபுரம் வரை இவர்களை ரயிலில் கொண்டு வந்து அங்கிருந்து பாதுகாப்பாக பஸ் மூலம் யாழ்ப்பாணம் கொண்டுவருவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### யாழ் மாவட்ட...

— 1ம் பக்கத் தொடர்

நீதிமன்றங்களில் ஆஜராவது அசாத்தியமாகவிருப்பதால் சகல வழக்கு விசாரணைகளையும் ஒத்திவைக்குமாறு கேட்டுள்ளனர்.


யாழ்நகரில் — முதன் முறையாக

**SPECIAL ENGLISH COURSE**

4 மாதத் தீவிரப் பயிற்சி

ஆசிரியர் திரு. T. N பஞ்சாட்சரம்

" R. சபாநாயகம்

**ஆரம்பம் 2-2 85**

- இலவச அச்சடித்த பாடக் குறிப்புகள்
- வினா - விடைப் பயிற்சிகள்

விபரங்களுக்கு : நேரில் / தபாலில்

**ASTAN INSTITUTE**

66/1 HOSPITAL ROAD - JAFFNA


ஈழமுரசு சாயிபாபா அடவர்னா சிங் அச்சகஇயந்திரஸ் ஸ்தாபனத்தாரால், 37, கண்டி வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 24 1 85 வியாழக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.